# Deposition of witness
# (Chapter XXIII code of Criminal Procedure)
# In the court of Judicial Magistrate No.II, Tindivanam.

**CASE NO.CC.No. 78/2020 PW – 2**
**DATE 07.09.2022**

Name : திருமதி. லோகநாயகி
Father/husband Name : சக்திவேல்
Village /City : முன்னூர்
calling :
Taluk :
Age : 37

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day

<u>**முதல் விசாரணை**</u>

நான் கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். கடந்த 27.05.2020 அன்று இரவு 8 மணியளவில் அச்சமயத்தில் கொரானா காலம் என்பதால் என்னிடமும், என் பிள்ளைகளிடமும் ஆஜர் எதிரிகளில் 2 மற்றும் 3 சென்னையில் இருந்து ஆஜர் எதிரியான 1 ஆம் நபர் வீட்டிற்கு வந்தார்கள் அதனால் வெளியே செல்ல வேண்டாம் என்று கூறினார். முதலில் சின்னபொன்னு (எ) சசிகலா வந்து எனது கணவரிடம் சென்னையில் இருந்து வந்தா என்ன கொரானாவா என்று சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் தூரத்தில் அடுப்படியில் இருந்தேன். நான் சும்மா பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்து கொண்டிருந்தேன். அதற்கப்புறம் பார்த்தால் எனது கணவரை நாலு பேரும் சேர்ந்து அடித்துக்கொண்டிருந்தார்கள். நான் போய் கேட்கும் போது என்னை அசிங்கமாக ஆரவல்லி என்பவர் அங்க போனவளே, இங்கு போனவளே என்று அசிங்கமாக திட்டிக்கொண்டிருக்கும் போது கலியபெருமாள் கையில் இரும்பு ராடை எடுத்து என்னுடைய கணவர் பின் தலையில் மற்றும் காலில் அடித்தார். நான் வேணாம் மறித்து விடும் போது என்னை கலியபெருமாள் எட்டி எட்டி உதைத்தார். என் கணவருக்கு இரத்தமாக வந்தது அதன்பின்னிட்டு எதிரிகள் தூரத்தில் சென்றுவிட்டார்கள். நானும் என்பிள்ளைகளும் மற்றவர்கள் உதவியுடன் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து வரவழைத்து என் கணவரை திண்டிவனம் அரசு

மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தேன். அதன்பின்னிட்டு மருத்துவமனையில் போலிசார் விசாரித்து எழுதிக்கொண்டார்கள். என்னை போலிசார் விசாரித்தார்கள். என் கணவரை தாக்கிய ஆயுதத்தை நான் பாரத்தால் அடையாளம் காட்டுவேன். இன்று நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஆயுதம் தான் எதிரி என் கணவரை தாக்கிய ஆயுதம்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

//திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.II,
Tindivanam.

**CASE NO.CC.No. 78/2020 PW – 1**
**DATE 07.09.2022**

Name : திரு. சக்திவேல்
Father/husband Name : ஆறுமுகம்
Village /City : முன்னூர்
calling :
Taluk :
Age : 48

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது சென்னையில் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் மற்றும் உறவினர்கள் ஆவார்கள். கொரானா காலகட்டத்தில் வீட்டில் உள்ள என் பிள்ளைகளிடமும், மனைவியிடமும் எங்கும் வெளியில் செல்லக்கூடாது என்று கூறியிருந்தேன். ஆஜர் எதிரி கலியபெருமாள் வீட்டிற்கு சென்னையில் இருந்து கொரானா சமயத்தில் சங்கர் அவரது மனைவி குழந்தைகள் எல்லாரும் வந்திருந்தார்கள். நான் எனது பிள்ளைகளையும், மனைவியையும் வெளியே செல்லவேண்டாம் என்று திட்டமிட்டிருந்தேன். கடந்த 27.05.2020 அன்று இரவு 8 மணியளவில் கலியபெருமாள் மற்றும் அவரது அக்கா அவரது மனைவியும் சேர்ந்து சென்னையில் இருந்து வந்தா என்ன கொரானாவா என அசிங்கமாக தேவடியாபையா என்று திட்டி சட்டையை இழுத்து தகராறு செய்து கொண்டிருந்த போது சங்கர் மற்றும் கலியபெருமாள் அச்சமயம் ஓடி வந்து கலியபெருமாள் என்னை கொரா கிரானா என்று சொன்னால் தேவடியாபையா என்று அசிங்கமாக திட்டி கையில் வைத்திருந்த இரும்பு கடப்பாறை கம்பியால் எனது பின்பக்க தலையில் ஓங்கி அடித்தார். பின்பு நான் கீழே விழுந்தவுடன் மீண்டும் அவர் என்னை காலால் எட்டி உதைத்தார். அதன்பின்னிட்டு நான் மயங்கிவிட்டேன். எனக்கு எதுவும் தெரியாது. எனது மனைவியை கலியபெருமாள் எட்டி உதைத்ததாக கூறினார்கள். பின்பு என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக

திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு நானும் எனது மனைவியும் சென்றோம். மறுநாள் பிரம்மதேசம் காவலர்கள் என்னிடம் விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்வத்தின் போது எதிரி பயன்படுத்திய ஆயுதத்தை சாட்சி நீதிமன்றத்தில் வைத்திருந்ததை காண்பித்து அந்த இரும்பு ராடால் என்னை அடித்தார்கள் என்று சாட்சியம் அளித்ததின் அடிப்படையில் அந்த இரும்பு ராடு ம.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

//திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்